# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - 9)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B)

**திம்பு பேச்சுவார்த்தை**

இந்தியாவில் மத்தியில் வடகிழக்காக அமைந்துள்ள பூட்டான் என்ற நாட்டின் தலைநகரான திம்புவில் 1985ம் ஆண்டு ஆடி - ஆவணி மாதங்களில் திம்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்திய அரசின் முயற்சியால் இலங்கை அரசாங்கத்திற்கும் ஆயுதமேந்திய இயக்கங்களின் தலைவர்களுக்குமிடையே இடம்பெற்ற சமாதான தீர்வுப் பேச்சுவார்த்தையாக இது ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை அரசின் பிரதிநிதிகளாக பிரபல சட்டத்தரணி ஹெக்டர் ஜெயவர்தனா (ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் சகோதரர்) தலைமையில் மூன்று சட்டத்தரணிகளும் பங்குபற்றியிருந்தார்கள். தமிழர் தரப்பு சார்பில் எல்ரிரிஈ ஈபிஆர்எல்எப் ஈரோஸ் புளொட் ரெலோ ஆகிய இயக்கங்களினதும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கட்சியினதும் பிரதிநிதிகளாக அந்தந்த அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட அதிகாரத்தைப் பரவலாக்குவதின் மூலமாக தீர்வை ஏற்படுத்தும் யோசனை தமிழ்த் தரப்பால் நிராகரிக்கப்பட்டது. தமிழ்த் தரப்பு நான்கு அம்சக் கொள்கைக் கோட்பாடுகளை முன்வைத்தது. அவையாவன:

1. *தமிழ் மக்களை ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரித்தல்.*
2. *தமிழர்கள் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களை தமிழர்களின் தாயகமாக அங்கீகரித்தலும் அதன் எல்லைகள் உருக்குலையாதிருக்கும் உத்திரவாதமும்.*
3. *தமிழ்த் தேசிய இனமக்களுக்கு பாராதீனப்படுத்த முடியாததான சுயநிர்ணய உரிமையுண்டு என அங்கீகரித்தல்*
4. *இலங்கையைத் தாயகமாக கொண்டுள்ள சகல தமிழர்களும் முழுமையான பிரஜாவுரிமையும் அடிப்படை ஜனநாயகவுரிமையும் கொண்டவர்கள் என அங்கீகரித்தல்*

   இவை பற்றி இலங்கை அரசு ஆராய்ந்த பின்னர் எவற்றையும் ஏற்காது ஆனால் 4வது உரிமைக் கொள்கையை மட்டும் ஏற்க இணக்கம் தெரிவித்த நிலையில் பேச்சு வார்த்தை மேற்கொண்டு நீடிக்காது ஆவணி மாதம் 18ந் திகதியன்று முறிவடைந்தது.

**ஈழப் போர்**

திம்புப் பேச்சு வார்த்தையால் எதுவித பலனும் ஏற்படாததால் மீண்டும் வடகிழக்கில் கொரில்லா யுத்தம் ஆரம்பமாகியது. யுத்த ஆய்வாளர்கள் யுத்தம் நடந்துவந்த காலகட்டத்தை ஆறு நிலைகளில் வகுத்து விமர்சித்து வந்துள்ளார்கள். ஈழப்போர் (1) 1983 தொடக்கம் 1987 வரையும் பின் (இந்தியப் படையின் இடையீடு) 1987 தொடக்கம் 1990 வரையும்: ஈழப் போர் (2) 1990 தொடக்கம் 1995 வரையும்: ஈழப் போர் (3) 1995 தொடக்கம் 2002 வரையும்: பின் (சமாதான முயற்சிகள்) 2002 தொடக்கம் 2006 வரையும்: பின் ஈழப் போர் (4) 2006 தொடக்கம் 2009 வரையும்

என அதன் காலகட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**விஜய குமாரணதுங்கவின் சமாதான முயற்சி**

சிறந்த நடிகராகவும் பாடகராகவும் புகழ் பெற்ற விஜய குமாரணதுங்க சிறந்த மனிதாபிமான தன்மையைக் கொண்டவராகவும் திகழ்ந்தார். அரசியலிலும் நுளைந்தவர் ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியிலும் பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். அக்கட்சியிலும் திருப்தியற்று தானாக ஒரு புதுக்கட்சியினை 16.02.1984 அன்று ஆரம்பித்தார். ஸ்ரீ லங்கா மகஜன கட்சி என்ற பெயரிலான இக்கட்சியில் ஓசி அபேகுணவர்த்தனா வை.பி.டி.சில்வா பாரத லக்ஸ்மன் பிறேமசந்திரா என்பவர்களுடன் அவரின் மனைவி சந்திரிக்காவும் தற்போது அரசியலிலுள்ள சில அரசியல்வாதிகளும் முக்கியமாக குறிப்பிடக்கூடிய அங்கத்தவர்களாக இருந்தார்கள். இக் கட்சி ஆரம்பித்ததுமே அதன் முக்கிய பிரச்சாரமாக எடுத்துக்கொண்ட விடயம் உள்நாட்டுப் போரை நிறுத்தி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முன்னெடுத்தலாகும். 1986ம் ஆண்டு யாழ்ப்பாணம் முழுதாக எல்ரிரிஈ யின் கட்டுப்பாட்டில் இருந்தபோது விஜய குமாரணதுங்க அங்கு சென்று அங்கிருந்த பிரபலங்களோடும் எல்ரிரிஈ யின் இளம் தலைவர்களுடனும் பேசி கருத்துக்களை கேட்டறிந்தார். ஒரு சமயம் அவரும் மனைவி சந்திரிக்காவும் தமிழ் நாட்டில் (இந்தியா) வைத்து எல்ரிரிஈ யின் சில தலைவர்களை சந்தித்து சமாதானம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார் என்ற தகவலும் உண்டு. அவர் இறப்பதற்கு முன்னர் ஆரம்பித்த இடதுசாரித் தலைவர்களை ஒன்றுபடுத்தி ஐக்கிய சோசலிச கூட்டணியை உருவாக்கும் முயற்சி நிறைவேறாமலே ஜே.வி.பி. கிளர்ச்சிவாதிகளின் இராணுவப் பிரிவான தேசப்பிரிய ஜனதா வியாபாரய எனும் அமைப்பால் 16.02.1988 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். தங்கள் தலைவர் றோகண விஜயவீரவை அரசியலில் விஞ்சிவிடுவார் என்பதாலும் தங்கள் கிளர்ச்சியின் எதிர்காலம் அவரின் அரசியல் நகர்வுகளால் முடக்கப்படலாம் என்பதாலும் அவரை தீர்த்துக்கட்ட முடிவெடுத்தார்கள். அவர் அமைக்கவிருந்த சோசலிச கூட்டணியில் கம்யூனிஸ்ட் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி நவசமசமாஜக் கட்சி ஈபிஆர்எல்எப் தமிழ் இயக்கமும் அடங்கியிருந்தன. அவர் இறந்தபின்னர் அக்கூட்டணி உதயமானது மட்டுமல்லாமல் 1989ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மூன்று பாராளுமன்ற ஆசனங்களில் வெற்றி பெற்றும் இருந்தது. 1993ல் அக்கூட்டணி சந்திரிக்கா தலைமையில் சுதந்திரக் கட்சியின் மக்கள் கூட்டணியில் இணைந்துகொண்டது. அத்தோடு 1994ம் ஆண்டைய ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா மிகவும் கூடிய (62%) வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார்.

**முஸ்லீம்களுக்கான தனிக்கட்சி**

இந்தக் காலகட்டத்திலேயே ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் என்ற முஸ்லீம் மக்களின் அரசியல் செயற்பாடுகளுக்கென ஒரு தனிக்கட்சிக்கு ஆரம்பப் புள்ளியிடப்பட்டது. கிழக்கில் சட்டத்தரணியாக பணிபுரிந்து கொண்டிருந்த சம்மாந்துறையைச் சேர்ந்த கல்முனையில் படித்து வளர்ந்த எம்.ஏச்.எம்.அஷ்ரப் இந்த முயற்சியை 21.09.1981 அன்று ஆரம்பித்து அதன் முன்னோடியாக விளங்கினார்.

இவர் ஆரம்பகாலத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராக விளங்கியவர். இவரை அரசியலுக்கு வரத்தூண்டியது தந்தை செல்வநாயகம் மேல் இவருக்கு ஏற்பட்ட

ஒருவித பற்றுதலேயாகும். 1976ம் ஆண்டு பெப்ரவரி 02ந் திகதி புத்தளத்தில் இடம்பெற்ற முஸ்லீம் பொது மக்கள் பலர் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி எந்த முஸ்லீம் பிரதிநிதியும் வாய்திறந்து பாராளுமன்றத்தில் பேசாதிருந்தபோது தந்தை செல்வா மட்டும் அதனைக் காரசாரமாக கண்டித்து உரையாற்றியதை அஷ்ரப் வியந்து பாராட்டியிருந்தார்.

முஸ்லீம் காங்கிரஸ் ஆரம்பிப்பதற்கு முன்னர் 1977ம் ஆண்டில் அரசியலில் ஈடுபட்ட சிலருடன் இவரும் சேர்ந்து முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்து அதன் சட்ட ஆலோசகராக செயற்பட்டார். அவர் சார்ந்த முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் கூட்டுச்சேர வைத்து தேர்தலைச் சந்திக்க இணங்கப்பட வைத்தார். 1977ம் ஆண்டைய பொதுத் தேர்தலில் தமிழர் முன்னணியின் பட்டியலில் முஸ்லீம் முன்னணியும் சேர்ந்து போட்டியிட்டுத் தமிழர் முன்னணி 18 ஆசனங்களைப் பெற்றும் முஸ்லீம் முன்னணி ஆசனமெதுவும் பெறாது விட்டது. அதன் பின் முஸ்லீம் முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் 1980தில் ஒன்றிணைந்தபோது அஷ்ரப் அதனின்றும் விலகிவிட்டார். பின் தானே தனித்து உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸை பலம்பொருந்திய கட்சியாக்கினார்.

இன ரீதியான பெயரைக் கொண்டு அரசியல் கட்சி உருவாக்குவது காலத்துக்காலம் இடம் பெற்றுவந்த சம்பிரதாயமாகிவிட்டது. 1935ல் சிங்கள மகாசபை என இனத்தைக் கொண்டு பெயரிட்டவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆவார். பின் அதை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சங்கமமாக்கிவிட்டார். 1944ல் தமிழ் காங்கிரஸ் கட்சியை ஜி.ஜி.பொன்னம்பலம் இனப் பெயர் கொண்டு உருவாக்கியிருந்தார். 1949ல் தமிழ் அரசுக் கட்சியை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உருவாக்கினார். தற்போது நவ சிங்கள உறுமய தமிழ் முற்போக்கு கூட்டணி என இனத்தின் பெயர் கொண்ட கட்சிகள் உள்ளன.

முஸ்லீம் காங்கிரசின் ஸ்தாபகர் எம்.எச்.எம்.அஷ்ரப் 18.09.2000 அன்று அம்பாரைக்கு உலங்கு வானூர்தியில் பயணம் சென்றபோது விபத்து ஏற்பட்டு அதில் மரணமானார். அவரின் மறைவுக்குப் பின் கட்சி மூன்றாக பிரிந்தாலும் உருவாக்கிய கட்சிப்பெயருடன் அவரின் சகா ரவுப் ஹக்கீம் தலைமையில் சிறப்பாக இயங்குகின்றது.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற எதிர்பார்ப்பு தமிழர்கள் மத்தியில் இன்னமும் சிறிதும் கலையாது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. முஸ்லீம்களின் சம்மதமே அதனை உருவாக்க மிகவும் தேவையாகவுள்ளது. சிறுபான்மையினத்திற்குள் இன்னொரு சிறுபான்மையினமாக வாழும் முஸ்லீம்களின் இருப்பு காணித் தேவை வாழ்வாதாரம் சமய கலாச்சார பாரம்பரியங்கள் ஆகியவற்றை தீர்மானித்து சுயமாக வாழ தனியான சுயாட்சி அலகு அவர்களுக்கு தேவை என்பது ஏற்கக்கூடியது. இது பற்றி எவ்வினத்தையும் பாதிக்காத ஒரு சிறப்பான முடிவு எட்டப்படும் வரை தமிழ் பேசும் மக்களின் தாயகம் அமையக் காலதாமதமாகலாம்.

(தொடரும்)